International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 03 Issue: 02 April to June 2021 www.irjtsjournal.org

# புறநானூற்றுப் பாடல்களில் கடையேழு வள்ளல்களின் கொடைமடம்
# (The Unlimited Liberality of Last Seven Philanthropists in Purananooru Songs)

ஷா. முஹம்மது அஸ்ரின்,

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி) திருச்சி – 20.

**முன்னுரை:**

எட்டுத்தொகை நூல்களுள் புறத்திணை சார்ந்த நூலாகப் புறநானூறு திகழ்கிறது. வீரம், கொடை முதலானவற்றை மையமாகக் கொண்டு புறத்திணைப் பாடல்கள் பாடப்பட்டுள்ளது. **“தமிழரின் வரலாற்றுப் பெட்டகம்”** என்று போற்றப்படும் இந்நூலில் 15 பாண்டியர்கள், 18 சோழர்கள், 18 சேரர்கள் மற்றும் 18 வேளிர்களைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. சங்க காலத்தில் ஈகையில் சிறந்து விளங்கிய ஏழு குறுநில மன்னர்கள் (வேளிர்கள்) **“கடையேழு வள்ளல்கள்”** என்ற பெயரைக் கொண்டு அழைக்கப்பட்டனர். இவர்களின் ஈகைப் பண்பும் கொடைச் சிறப்பும் குறித்த புறநானூற்றுப் பாடல்கள் ஆய்வுப் பொருளாகின்றன.

**வள்ளல் - விளக்கம்:**

வள்ளல் என்ற சொல்லுக்கு **“தேவை அறிந்து (வறுமை, நோய் போன்றவற்றால் வாடுபவர்களுக்கு) பொருளோ பணமோ தந்து உதவுபவர்”** என்றும், **“கேட்டவர்களுக்கு இல்லை என்று கூறாமல் கேட்ட பொருள் தருபவர்”** என்றும் ஆக்ஸ்ஃபோர்டு அகராதி பொருள் கூறுகிறது. மேலும், வள்ளல் என்ற சொல்லுக்கு **“கொடையாளி”** என்றும், **“வரையாது கொடுப்போன்”** என்றும் பொருள்கள் பிற அகராதிகள் கூறுகின்றன.

**வள்ளல்களின் பெயர் பட்டியல்:**

‘**கடை**’ என்ற சொல்லுக்கு ‘**இறுதி**’ என்று பொருள். எனவே, கடையேழு வள்ளல்கள் என்பது சங்க காலத்தில் வாழ்ந்த இறுதி ஏழு வள்ளல்களைக் குறிக்கிறது. புறநானூற்றிலுள்ள 400 பாடல்களில் 87 ஆம் பாடல்முதல் 165 ஆம்

பாடல்வரை கடையேழு வள்ளல்கள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. கடையேழு வள்ளல்களின் பெயர்களும் இவர்களுக்கு முன்னால் வாழ்ந்து மறைந்த முதலேழு மற்றும் இடையேழு வள்ளல்களின் பெயர்களும் பின்வருமாறு

**முதலேழு வள்ளல்கள்**: செம்பியன், காரி (சகாரி), விரதன், நிருத்தி, துந்துமாரன், சாகரன் (சூரிய வம்சத்தவர்), நளன்.

**இடையேழு வள்ளல்கள்**: அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், வக்ரன், கண்ணன், சந்தன்.

**கடையேழு வள்ளல்கள்**: அதியமான், பாரி, காரி, ஆய், பேகன், நள்ளி, ஓரி.

1. **அதியமான்**:

தகடூரைத் (இன்றைய தருமபுரியைத்) தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன் அதியமான். சேரர் குலத்தில் இருந்து பிரிந்த அதிகர் என்னும் குலத்தைச் சார்ந்தவன். **அதிகன், அதிகைமான், அதியமான் நெடுமான் அஞ்சி , அஞ்சி, அதிகமான்** எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறான். கஞ்ச மலையில் அபூர்வமாக காய்த்த நீண்ட நாள் வாழ வைக்கும் கருநெல்லியை ஔவைக்குக் கொடுத்து இன்புற்றான். எனவே , **"ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான்** " என போற்றப்பட்டான். தன்னிடம் பொருள் (பரிசில்) வேண்டிவரும் புலவர்கள் , பலமுறை தன்னிடம் பொருள் பெற்றவராயினும் , முதல்முறை கொடுப்பது போலவே முகம்சுழிக்காது கொடுப்பான் என்பதைக் கூறும் ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடல்,

**"ஒருநாள் செல்லலம்; இருநாள் செல்லலம்;**

**பன்னாள் பயின்று, பலரொடு செல்லினும்**

**தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ;"**

**(புறநானூறு. 101:1-3)**

2. **பாரி**:

சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் என்ற ஊரிலிருந்து சில மைல் தொலைவில் பிரான் மலைப் (பறம்பு மலைப்) பகுதியை ஆட்சி புரிந்தவன் பாரி. இவன் "**வேள்பாரி**" என்ற பெயராலும் வழங்கப்ப்டுகிறான். இவன் நாகமலைப் பாதையில் படர்வதற்கு பற்றுக் கோடின்றி ஆடிக் கொண்டிருந்த முல்லைக் கொடி படர்வதற்காகத் தன் தேரையே கொடியருகில் நிறுத்திவிட்டுச் சென்றான். எனவே, இவன் "**முல்லைக்குத் தேர் தந்த பாரி** " எனப் பெயர் பெற்றான். இவனது கொடைச் சிறப்பைக் கூறும் கபிலர் பாடிய புறநானூற்றுப் பாடல்,

**“பாரி பாரி என்றுபல ஏத்தி,**

**ஒருவர்ப் புகழ்வர், செந்நாப் புலவர்**

**பாரி ஒருவனும் அல்லன்;**

**மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே.”**

**(புறநாணுறு. 107:1-4)**

எனப் பாரியைக் காட்டிலும் உலகை காக்க மாரி (மழை) இருக்கிறதாக பாரியின் ஈகைக் குணத்தை மழைக்கு ஒப்பாகக் கூறி இகழ்வது போல் புகழ்ந்துள்ளார். மற்றொரு பாடலில், பறம்பு நாட்டில் வந்து பாடும் புலவர்களுக்கு வள்ளல் பாரி பறம்பு மலையையே பங்கிட்டுப் பரிசலிப்பான் எனக் கபிலர் பாரியின் வள்ளல் தன்மையைப் பாடியுள்ளார்.

**“பறம்பு பாடினார் அதுவே! அறம்பூண்டு,**

**பாரியும், பரிசிலர் இரப்பின்.”**

**(புறநாணுறு. 108:4-5)**

**3. காரி:**

திருக்கோவலூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தவன் திருமுடிக் காரி. தகடூர் போரில் அதியமானையும் கடையேழு வள்ளல்களுள் ஒருவனான ஓரியையும் எதிர்த்துப் போரிட்டவன். மலையமான் குலத்தைச் சார்ந்த இவன் புலவர்களின் காதில் கடுக்கனிட்டும் , அவர்களைத் தனது தேரின் மேல் அமர்த்தியும் கண் குளிரக் கண்டு பெருமகிழ்ச்சி அடைவான். எனவே , இவன் **“தேர்வண் மலையன் ”** என்றும், **“மலையமான்”** என்றும், **“கோவற் கோமான் ”** என்றும் புலவர்களால் போற்றப்பட்டான்.

**“ஒரு திசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்**

**பலரும் வருவர், பரிசில் மாக்கள்;**

**வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்**

**ஈதல் எளிதே, மாவண் தோன்றல்;**

**அது நற்கு அறிந்தனை யாயின்,**

**பொது நோக்கு ஒழிமதி, புலவர் மாட்டே !”**

**(புறநானூறு. 121:1-6)**

காரியிடம் பரிசில் பெற நான்கு திசைகளிலிருந்தும் வருகின்ற புலவர்களுக்கு அவர்களின் திறமையை ஆராயாது வாரி வழங்கும் காரிக்கு கபிலர் அறிவுரை கூறுவதாக அமைந்த பாடல் , காரியின் கொடைச் சிறப்பை எடுத்தியம்புகிறது. மேலும் கபிலர்,

**“........ ஈத்த இழையணி நெடுந்தேர்**

**பயன்கெழு முள்ளூர் மீமிசைப்**

**பட்ட மாரி உறையினும் பலவே.”**

**(புறநானூறு. 123:4-6)**

என்ற பாடலில் முள்ளூர் மலை மீது விழும் மழைத்துளிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் இரவலர்களுக்குக் காரி கொடுத்த தேரின் எண்ணிக்கை அதிகம் எனப் புகழ்ந்துள்ளார்.

**“நாளன்று போகிப், புள்ளிடைத் தட்பப்**

**பதனன்று புக்குத், திறனன்று மொழியினும்,**

**வறிது பெயர்குநர் அல்லர்; நெறி கொளப்**

**பாடு ஆன்று, இரங்கும் அருவிப்**

**பீடுகெழு மலையற் பாடி யோரே.”**

**(புறநானூறு. 124:1-5)**

என்ற பாடலில் காரியைப் பார்த்துப் பாடியோர் வெறுங்கையுடன் திரும்பமாட்டார்கள் எனக் காரியின் கொடைக் குணத்தைக் கபிலர் புகழ்ந்து பாடியுள்ளார்.

**4. ஆய்:**

பொதிகை மலையை ஆட்சி செய்தவன் ஆய்க்குடி என்ற ஊரில் வாழ்ந்த அண்டிரன். **“ஆய்க்குடி அண்டிரன்”** என்றும், **“வேள் ஆய்”** என்றும் புலவர்களால் அழைக்கப்பட்டான். அவனிடம் பொருள் வேண்டி வரும் பாணர்களுக்கு பொன் , மணி ஆகியவற்றோடு யானைகளையும் பரிசாக வழங்குவான். எனவே , **“யானை பரிசில் தருபவன்”** என்று அவனைத் தமிழ் மக்கள் குறிப்பிடுகிறார்கள். ஆடை இல்லாமல் இருந்த தென்முகக் கடவுள் சிலைக்கு போர்வை போர்த்தி மகிழ்ந்தவன்.

**“ஈகை அரிய இழையணி மகளிரொடு**

**சாயின்று என்ப, ஆஅய் கோயில்.**"

**(புறநானூறு. 127:5-6)**

ஆயிடம் இருந்த அனைத்து பொருள்களையும் (பொன் , மணி, அணிகலன்) இரவலர்க்குக் கொடுத்ததால், அவனது மனைவி ஆபரணங்களின்றி மங்கல அணி மட்டுமே அணிந்து காணப்பட்டாள் என ஆயின் கொடைத் தன்மையை முடமோசியார் பாடியுள்ளார்.

"**இரவலர்க்கு ஈத்த யானையின், கரவின்று,**

**வானம் மீன்பல பூப்பின், ஆனாது.**"

**(புறநானூறு. 129:6-7)**

என்ற பாடலில் ஆய் மன்னன் இரவலர்க்கு கொடுத்த யானையின் எண்ணிக்கை வானிலுள்ள வின்மீண்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாக இருந்ததாக முடமோசியார் பாடியுள்ளார்.

"**இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்' எனும்**

**அறவிலை வணிகன் ஆஅய் அலன்;**"

**(புறநானூறு. 134:1-2)**

என்ற பாடலில் எதிர்ப்பயன் கருதாது உதவுபவன் அண்டிரன் எனப் புகழ்ந்து பாடியுள்ளார்.

"**பெருங்களிறு நல்கி யோனே! அன்னதோர்**

**தேற்றா ஈகையும் உளதுகொல்?**"

**(புறநானூறு. 140:8-9)**

என்ற பாடலில் ஆய் அண்டிரனிடமிருந்து மலை போன்ற யானையைப் பரிசாகப் பெற்ற ஔவையார், அவனது ஈகை குணத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

**5. பேகன்:**

பொதினி மலைப் (பழனி மலைப்) பகுதியை ஆட்சி புரிந்தவன் பேகன் என்ற குறுநில மன்னன். அவன் ஆவியர் என்னும் குலத்தைச் சார்ந்தவன். அக்குலத்தை ஆவி என்றும் வையாவி என்றும் வழங்குவர். எனவே , அவனை "**வையாவிக் கோப்பெரும் பேகன்** " என்றழைத்தனர். குளிருக்கு நடுங்கிய மயிலுக்குப் போர்வையைப் போர்த்தியதால் , "**மயிலுக்குப் போர்வை அளித்த பேகன்**" என்று அழைக்கப்பட்டான். அவனது கொடைச் சிறப்பை

**“எத்துணை ஆயினும் ஈதல் நன்று என,**

**மறுமை நோக்கின்றோ அன்றே,**

**பிறர் வறுமை நோக்கின்று, அவன் கைவண்மையே”**

**(புறநானூறு. 141:13-15)**

என்ற பாடலில் பயனை எதிர்பாராது பிறரின் வறுமையைப் போக்கும் குணமுடையவனாகப் பேகனைப் பரணர் புகழ்ந்து பாடியுள்ளார். மற்றொரு பாடலில்,

**“அறுகுளத்து உகுத்தும், அகல்வயல் பொழிந்தும்,**

**உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்,**

**வரையா மரபின் மாரி போலக்,”**

**(புறநானூறு 142:1-3)**

குளத்தையும் வயலையும் எதர்க்கும் பயன்படாத களர் நிலத்தையும் நிறைக்கும் மழை போல தன்னை நாடி வரும் இரவலர்க்குத் தகுதி பாராது பரிசளிப்பான் எனப் பேகனைப் பரணர் புகழ்ந்து பாடுயுள்ளார்.

**6. நள்ளி:**

இவன் நெடுங்கொடு மலை முகடு (நீலகிரி) மலைப்பகுதியை ஆட்சி புரிந்தவன். இவன் மலைவளம் நிறைந்த கண்டீர நாட்டைச் சார்ந்தவன். எனவே , இவனை **“நளிமலை நாடன் ”** என்றும், **“கண்டீரக் கோப்பெரு நள்ளி ”** என்றும், **“பெருநள்ளி”** என்றும் அழைக்கின்றனர். இவனுக்கு இளங்கண்டீரக்கோ , இளவீச்சிக்கோ என்ற இரு தம்பிகள் இருந்தனர். நள்ளியின் கொடைச் சிறப்பை

**“நள்ளி! வாழியோ; நள்ளி! நள்ளென்**

**மாலை மருதம் பண்ணிக் காலைக்**

**கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி,**

**வரவுஎமர் மறந்தனர்; அது நீ**

**பரவுக்கடன் பூண்ட வண்மை யானே.”**

**(புறநானூறு. 149:1-5)**

என்ற பாடலில் பாணர்களுக்குப் பெருநிதியை வழங்கிய நள்ளியால் பரிசிலுக்காகப் பாடும் தொழிலையே அவர்கள் மறந்தனர் என வன்பரணர் புகழ்ந்து பாடியுள்ளார்.

**7. ஓரி:**

இவன் கொல்லிமலைப் பகுதியை ஆண்ட குறுநில மன்னன். கடையேழு வள்ளல்களுள் வில் வித்தையில் சிறந்து விளங்கியவன். எனவே , இவனை “**வல்வில் ஓரி**” என்றும், “**ஆதன் ஓரி**” என்றும் அழைத்தனர். அவனது கொடைச் சிறப்பை,

**“தான்உயிர் செகுத்த மன்நிணைப் புழுக்கோடு,**

**ஆனுருக்கு அன்ன வேரியை நல்கித்,**

**தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்**

**பன்மணிக் குவையொடும் விரைஇக், ‘கொண்ம்’ எனச்**

**சுரத்துஇடை நல்கி யோனே; ............... ”**

**(புறநானூறு. 152:26-30)**

என்ற பாடலில் அவனைப் புகழ்ந்து பாடும் முன்னே மான் தசையும் ஆநெய் போன்ற மணமுள்ள மதுவும் பொன்னும் மணியும் வழங்கியதாக பரணர்களின் தலைவரான வன்பரணர் பாடியுள்ளார். மேலும்

**“மழையணி குன்றத்துக் கிழவன், நாளும்,**

**இழையணி யானை இரப்போர்க்கு ஈயும்,”**

**(புறநானூறு. 153:1-2)**

என்ற பாடலில் மலையில் வாழும் ஓரி தன்னை நாடி வரும் இரவலர்களுக்கு யானைகளைப் பரிசாக வழங்கினான் என வன்பரணர் புகழ்ந்து பாடியுள்ளார்.

**முடிவுரை:**

வீரத்தில் சிறந்து விளங்கிய குறுநில மன்னர்கள் தங்களது கொடைக் குணத்தால் வள்ளல்கள் எனப் பெயர் பெற்றனர். இவ்வாறாக , புறநானூற்றுப் பாடல்கள் வாயிலாக கடையேழு வள்ளல்களின் ஈகைக் குணத்தையும் கொடைச் சிறப்பினையும் அறிய முடிகிறது. இவர்களின் சிறப்புகள் புறநானூற்றில் மட்டுமின்றி நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை, சிறுபாணாற்றுப்படை போன்ற சங்க இலக்கியங்களிலும் பாடப்பட்டுள்ளன.

## துணைநின்ற நூல்கள்:


[1] இராகவையங்கார். மு (நூ.ஆ), வேளிர் வரலாறு, தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை, 1913.

[2] இராகவைய்யங்கார். ரா (நூ.ஆ), தமிழகக் குறுநில வேந்தர்கள், பாரதி பதிப்பகம், சென்னை, 1994.

[3] குப்புசாமிப் பிள்ளை. சிவ (நூ.ஆ), சங்க கால வள்ளல்கள் பகுதி- 1, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1946.

[4] குப்புசாமிப் பிள்ளை. சிவ (நூ.ஆ), சங்க கால வள்ளல்கள் பகுதி- 2, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1947.

[5] கோவிந்தன். கா (நூ.ஆ), சங்க கால அரசர் வரிசை- 4 வள்ளல்கள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1954.

[6] கோவிந்தன். கா (நூ.ஆ), தமிழக வரலாறு சங்ககாலம்-அரசர்கள், எழிலகம் வெளியீடு, திருவண்ணாமலை, 1993.

[7] பாலூர் கண்ணப்ப முதலியார் (நூ.ஆ), அதிகமான், ராஜா ராம்சந்தர் & கம்பெனி, சென்னை, 1958.

[8] புலியூர்க் கேசிகன் (உ.ஆ), புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2010.

[9] ராஜவேலு. கு (நூ.ஆ), வள்ளல் பாரி, பாரி நிலையம், சென்னை, 1958.

[10] ஜகந்நாதன். கி.வா (நூ.ஆ), அதிகமான் நெடுமான் அஞ்சி, அமுத நிலையம், சென்னை, 1959.

[11] ஜகந்நாதன். கி.வா (நூ.ஆ), எழு பெரு வள்ளல்கள், அமுத நிலையம், சென்னை, 1959.

[12] ஜகந்நாதன். கி.வா (நூ.ஆ), பாரி வேள், அமுத நிலையம், சென்னை, 1954.